

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை மற்றும் பொன்னேரி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வருவாய் மற்றும பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 2973 பயனாளிகளுக்கு பட்டா வழங்கும் விழா மாவட்ட ஆட்சியர் பிரபுசங்கர் தலைமையில் மீஞ்சூர் எழில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பு அமைச்சரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பங்கேற்று பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, மு.பகலவன், மு.கதிரவன், எஸ்.ரமேஷ், பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகரன், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், பா.சுகுமாறன், கா.சு.ஜெகதீசன், மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேல், பொன்னுசாமி(எ)ஜான், க.சு.தமிழ்உதயன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், மீஞ்சூர் ஒன்றியக்குழுத் தலைவர் அத்திப்பட்டு ஜி.ரவி மற்றும பலர் பங்கேற்றனர்.

### ந.அதியமான் தலைமை! பி.ஜெய்சங்கர் வரவேற்புரை! செய்தித்தாள் விற்பனையாளர் சங்கத் தலைவர்

## எம்.கருணாநிதி இல்ல மணவிழா! அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வாழ்த்துரை!

### நே.சிற்றரசு - தயாநிதிமாறன் எம்.பி. - எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, பிப். 6-

சென்னை - அரும்பாக்கம், செய்தித்தாள் விற்பனையாளர் சங்கத் தலைவர் எம்.கருணாநிதி - கே.சாந்தி ஆகியோரின் புதல்வி கே.வித்யாவிற்கும், காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம், தண்டரைப் பேட்டை நினைவில் வாழும் மு.கமலக்கண்ணன் - க.ரேவதி ஆகியோரின் புதல்வர் கே.கோபால கிருஷ்ணனுக்கும் மணவிழா 8.2.2024 - வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் ரெட்டேரி லட்சுமிபுரம், செங்குன்றம் நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீ இந்திராணி ஹனுமந்த மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு 105வது வட்டச் செயலாளர் ந.அதியமான் தலைமை வகிக்கிறார்.

இரா.பொன்னுரங்கம், இரா.ரவீந்திரகுமார், வி.எம்.சிவா, தெ.கருணாநிதி, ப.மகேஷ் ராஜா, ஆ.ஏகாம்பரம், கு.பாபு, க.கோவிந்தராஜ், சி.பி.திருமலை, பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், கே.அருண் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

103வது வட்டச் செயலாளர் பி.ஜெய்சங்கர் வரவேற்புரையாற்றுகிறார்.

இம்மணவிழாவில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., டாக்டர் திலீப் ராஜகண்ணப்பன், ந.இராமலிங்கம், ச.பரமசிவம், பேபி சேகர், கார்த்திக் மோகன், எஸ்.அசோக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இரா.சுந்தர், இரா.சந்தர், நன்மாறன், கோ.முரளி, பி.தங்கவேல், பாலகிருஷ்ணன், த.அப்பு பி.கார்மேகம், டி.கே.சுந்தர், ஜெ.ஞானமணி, பி.சுமன், முருகானந்தம், பி.சக்கரவர்த்தி, எம்.தண்டபாணி, எம்.முத்துராஜ், கோதை ஜெயராமன், பாலசரவணன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இம்மணவிழாவில் ஆலந்தூர் பணிமனையின் தொ.மு.ச. நிர்வாகிகளும், பணிமனையின் நிர்வாகக் குழு, போக்குவரத்து தொழிலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### கே.பாண்டுரங்கன் தலைமை! எஸ்.குகாநந்தன் வரவேற்பு!

## தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. சார்பில் சங்கக் கொடியேற்று விழா!

### மின் கழக மாநில பொதுச் செயலாளர் பா.மணிமாறன் கொடியேற்றி சிறப்புரை!

சென்னை, பிப். 6

தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு இன்று (6.2.2024 செவ்வாய்க்கிழமை) காலை 10:30 மணி அளவில், வேளச்சேரி பெயர் பொறியாளர் அலுவலக வளாகத்தில் சங்கக் கொடி ஏற்று விழா நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு கே.பாண்டுரங்கன் தலைமை வகிக்கிறார். எஸ்.குகாநந்தன் வரவேற்புரை ஆற்றுகிறார். ஏ.குமாரசாமி, எஸ்.பார்த்திபன், ஆர்.சம்பத்குமார், ஆர்.எஸ்.ஜெயவேல், ஜி.சத்யநாராயணன், ஜி.மதிவாணன், எஸ்.ராஜ்குமார், வி.சிவபிரகாசம், எஸ்.ரவி, எஸ்.கரிகாலன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மின் கழக மாநில பொதுச் செயலாளர், தொ.மு.ச. பேரவைச் செயலாளர் பா.மணிமாறன் சங்கக் கொடி ஏற்றி சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் பி.முருகன், பி.முரளிதரன், எஸ்.ரமேஷ், ஜி.ராஜேந்திரன், பி.பிரபாகரன், பி.விஜயகுமார், ஜே.பாபு, கே.விஜயகுமார், என்.கோவிந்தசாமி, எஸ்.சாம்சன் செல்வகுமார், கே.கோகுல், வி.வினோத்குமார், எம்.கேசவன், கே.நெடுஞ்செழியன், ஆர்.சந்திரமோகன், சீனிவாசன், வி.சண்முகம், கே.நேதாஜி, டி.சுதாகர், எம்.ராஜா, இ.சீனிவாசன், டி.ஜானகிராமன், ஏ.லோகநாதன், என்.கோகுலகிருஷ்ணன், டி.சாய் சுரேஷ், பி.கோபிநாத், எம்.அசோக், கஜேந்திரன், பி.என்.ஜெயபிரகாஷ், என் ஜோசப் பெர்னாட், வி.சண்முகம், பி.ராஜேஷ், எஸ்.மாலதி, ஆர்.முருகன், பி.அமுதன், வி.ரவி, எஸ்.நாகராஜன், கே.சந்திரகாந்த், பி. பாஸ்கர், எம்.மூர்த்தி, வி.சசிகுமார், எஸ்.சுகுமாரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் ஜி.ரவீந்திரன் நன்றி கூறுகிறார்.

### சென்னை வடகிழக்கு மாவட்ட துணைச் செயலாளர்

## டி.ராமகிருஷ்ணன் சகோதரர் டி.ஏழுமலை மறைவு!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் - மீ.வே.கருணாகரன் - நா.பரந்தாமன் அஞ்சலி!

சென்னை, பிப். 6 -

சென்னை வடகிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன் சகோதரரும் கும்மனூர் கழக முன்னோடியும் மாவட்டப் பிரதிநிதியுமான டி.ஏழுமலை (எ) தமிழ்தாசன் (வயது 85) 2.2.2024 - வெள்ளிக்கிழமையன்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம், நேரில் சென்று மறைந்த டி.ஏழுமலை உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மேலும் சோழவரம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மீ.வே.கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர் நா.பரந்தாமன், கும்மனூர் பேரூராட்சி தலைவர் வேதாசரம், கும்மனூர் பேரூர் செயலாளர் அரசன், சம்பத், கும்மனூர் குமரேசன், மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் - மாதவரம்

## தியாகதீபம் மா.பொ.வேதா 42ஆம் ஆண்டு நினைவுநாள் - அமைதிப் பேரணி!

### டி.ராமகிருஷ்ணன் - மிசா பா.மதிவாணன் - கே.பி.சங்கர் - எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் பங்கேற்பு!



சென்னை, பிப்.6-

மாதவரம் தெற்கு பகுதி தி.மு.க. மற்றும் தியாக தீபம் மா.பொ.வேதா நினைவு மன்றம் சார்பில் மாதவரம் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்த தியாக தீபம் மா.பொ.வேதாவின் 42ஆம் ஆண்டு நினைவு நாள் மற்றும் அமைதிப் பேரணி 8.2.2024 - வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் மாதவரம் அண்ணா சிலை, கணகன் சத்திரம் ஜி.என்.டி. சாலையிலிருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் டி.ராம கிருஷ்ணன், மிசா. பா.மதிவாணன், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., எஸ்.நந்தகோபால், ஜி.துக்காராம், புழல் எம்.நாராயணன், எம்.பிரேம்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், எம்.அறிவழகி, எம்.ஆனந்தன், தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், வை.ம.அருள்தாசன், பெ.சரவணன், ஜி.தயாளன், மீ.வே.கர்ணாகரன், ஜி.ராஜேந்திரன், வீ.கண்ணதாசன், வீ.கணேசன், என்.பரந்தாமன், ஜெ. ஜெய் மதன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜி, பி.சாந்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மு.சிவக்குமார், பி.தமிழரசன், கே.பி.சொக்கலிங்கம், டி.சி.வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர், நந்தினி சண்முகம், ஜி.ராஜேந்திரன், கே.காசிநாதன், ஜே.ஆஸ்னா மெரிசியா, ஏ.சந்திரன், எஸ்.கனிமொழி சுரேஷ், டி.கார்த்திகேயன், ஜி.திருமலை துரைசாமி, எம்.குணசுந்தரி குட்டி மோகன், சி.கே.கோபால், எஸ்.எம்.பன்னீர்செல்வம், டி.ஆர்.செங்குட்டுவன், எஸ்.எம்.மோகன், டி.ஆர்.ரவீந்திர குமார், ஏ.சசிகுமார், யு. காந்திமதி உதயசூரியன், எஸ்.நிசார் அகமது, ஏ.ஜெய செல்வி அசோக் குமார், கே.பி.உசேந்திரன், ஏ.முனுசாமி, சி.கே. ஜி.தர்மராஜ், டி.சந்திரன், மா.பொ.வே.ராஜா, டி.மதன், எஸ்.கரண் ராஜ், பி.காசி ராஜன், ஆசைத்தம்பி,

புத்தகரம் இ.ஏழுமலை, வி.எஸ்.ஆர்.ஜெயக்குமார் இ.மோகன் ஆ.விஜய லட்சுமி ஆனந்தன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை தியாக தீபம், மா.பொ.வேதா நினைவு மன்றமும் 28வது வட்டக் கழகமும் செய்துள்ளது.



சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் 13வது மண்டலம் 172 வது வார்டு மசூதி காலனியில் ரூ.3.27 கோடி மதிப்பிலான சாலையோர கழிவுநீர் உந்து நிலையம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு, அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்ததையடுத்து சைதை கிழக்கு பகுதி 172வது வார்டு மசூதி காலனியில் நடைபெற்ற விழாவில் சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது மண்டல குழு தலைவர் இரா. துரை ராஜ் முடிவுற்ற திட்டத்தை ரிமோட் கன்ட்ரோல் மூலம் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரிய ஏரியா பொறியாளர் விஜயகுமார், இணை பொறியாளர் ராம்ரமேஷ், துணை பொறியாளர் தாகிதீன், , வட்ட கழக செயலாளர் நேரு நகர் எஸ்.பாட்சா, மற்றும் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் 2024

### ‘நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்ற தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5-ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு திருமிகு. கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்கவிருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கீழ்க்கண்ட அட்டவணைப்படி பயணம் மேற்கொண்டு கழக நிர்வாகிகள், தொழிற்துறையினர், கல்வியாளர்கள், பல்துறை வல்லுநர்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் நேரடியாக சந்திப்பார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| “ பிப்ரவரி-6 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய |
| “ பிப்ரவரி-7 | மதுரை | மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், சிவகங்கை, தேனி வடக்கு, தேனி தெற்கு, திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு |
| “ பிப்ரவரி-8 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை , மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| “ பிப்ரவரி-9 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு |
| “ பிப்ரவரி-10 | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| “ பிப்ரவரி-11 | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, கரூர் |
| “ பிப்ரவரி-16 | ஒசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| “ பிப்ரவரி-17 | வேலூர் | வேலூர் , இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| “ பிப்ரவரி-18 | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| “ பிப்ரவரி-20 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| “ பிப்ரவரி-21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, வார்டு–110க்குட்பட்ட காமராஜபுரம், ஜெயலட்சுமிபுரம் பகுதிகளில் கிராமசபை கூட்டம் நேற்று (5.2.2024) மாமன்ற உறுப்பினர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகராட்சி அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். கிராமசபை கூட்டத்தில் பொதுமக்கள் தெரிவித்த புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.